**கவனிக்க**.- *17.5.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1812 - 2013 මැයි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.05.23

*1812 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 678 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 684 |


**கவனிக்க**.- (i) ஆவணங்கள் பதிவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) தொலைத் தொடர்பு அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர்" (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2013.07.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.*

*3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - ரூபா 2,54,100.*

*மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-*

(அ) விசேட கடினக் கொடுப்பனவு :
- (1) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
- (1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
- (2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(இ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஈ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டும் நிதி உதவிகள் வழங்கப்படும் ;

(உ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஊ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(எ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

(ஏ) விசேட அதிரடிப்படையின் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப்படையின் சேவையில் இருக்கும் காலம் வரை மட்டும் விசேட அதிரடிப்படைக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) உடல் தகுதித் தேவைப்பாடுகள்.- உயரம் : 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதித் தேவைப்பாடுகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனை யின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவைப்பாடு.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமான வர்களாகக் கருதப்படுவர்).

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்.

- பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரமே இறுதி எழுத்துமூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை,-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல் ;

* பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

6. **வைத்தியப் பரீட்சை**.- முன்னுரிமைப் பட்டியல் மற்றும் திறமை ஒழுங்கிற்கு அமைவாக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையை உறுதிப்படுத்த அவரின், அவரின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்ப தாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து அரச சேவைக்கு/ மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும், சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவியிலமர்த்தும் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கும் உரித்துடையவர்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி, ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தர்களுக்கும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 1952/2006 ஆம் இலக்க 2006.10.19 ஆந் திகதிய, 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் காலநிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம்வரை அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கை பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வ தானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/ 2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக, பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணநலச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 x 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் தொகுதி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/ கிராமசேவையாளர் பிரிவு :----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின்தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

ஆண்டுகள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-----.

(i) -----.
(ii) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் றிசேவ் பொலிஸ் சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர் பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது றிசேவ் பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளீரா? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?) :-----.

16. நீங்கள் தற்போது றிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்று கிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களினைக் குறிப்பிடுக (நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்று கிறீரா ? :-----. (அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பப் படல் வேண்டும்).

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள் ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப் பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்க வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவை யாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தமான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக : -----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

5-501

---

### அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

காால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இல் காணப்படும் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரல் - 2013

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளில் 2012.09.30 ஆந் திகதியன்று நிலவிய வெற்றிடங்கள் 21 இனை நிரப்பும் பொருட்டு தகைமையுடையோரை தெரிவுசெய்வதன் நிமித்தம் மிருக வைத்திய பட்டதாரிகளிடம் இருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வின் கட்டளைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறி வித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய ஏ4 கடதாசியின் இரு பக்கங்களினையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவொரு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பப் படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் கால்நடை வைத்திய அதிகாரி பதவி" எனும் சொற்றொடர் மிகத் தெளிவா எழுதப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பம் கோரல் முடிவுத் திகதி 2013.06.21 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் ஏதும் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற

எத்தகைய முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி வரை விண்ணப்பத்தினை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நஷ்டங்களுக்கு விண்ணப்பகாரரே பொறுப்பாவர். அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கால்நடை வைத்திய அதிகாரி பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவோர் நியமனத் திகதி முதல் 5 வருடங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமை மேற்கொள்ளல் வேண்டும்.

1. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறைமை**.- (i) கால்நடை வைத்திய அதிகாரி பதவிகளில் நிலவும் வெற்றிடங்களின் பொருட்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருக வைத்தியப் பீடத்தினால் வெளியிடப்படும் திறமை அட்டவணைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து மிருக வைத்தியத்தில் பட்டத் தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர், இலங்கை மிருக வைத்திய சங்கத்தில் பதிவுசெய்வதன் பொருட்டு தகைமையைப் பூரணப்படுத்துகின்ற ஆண்டிற்கு உரியவாறு பதிவுசெய்துள்ள திகதி ஒழுங்கிற்கு அமைய திறமை அட்டவணையின் இறுதியில் உட்படுத்தப்படும்.

(ii) திறமை அட்டவணை ஒழுங்கிற்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிட எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதற்குச் சமனான விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு உரிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(iii) நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலுப் பெறும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

2. **பணிக்கமர்த்துவதற்கான சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுவோர் விதவை/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அவர்களால் விண்ணப்பிக்கப்படுகின்ற இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி ஒன்றினை நிரப்பும் பொருட்டு நியமனம் செய்யப்படுவார்.

(iii) பொ. நி. சு. இலக்கம் 7/2007 (II) இற்கு அமைய ஏனைய மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 5 வருடங்களினுள் அடைந்து கொள்ளல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் 03 (மூன்று) வருடங்களினுள் ஏதாவது அரச கரும மொழி ஒன்றில் தேர்ச்சி மட்டத்தை அடைதல் வேண்டும். மற்றைய அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தை 06 (ஆறு) வருடத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும். I ஆம் வகுதிக்குரியவர்கள் இரண்டாவது அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சி மட்டத்தை அடைதல் வேண்டும்.

(iv) ஏனைய சேவை நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும் 1980.10.31 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பிரமாணம் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஒழுங்கு விதிகள் மற்றும் அவ்வப்போது அரசினால் வெளியிடப்படும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கு அமையவும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், நிதிப்பிரமாணங் களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இப்பதவி உட்படுத்தப்படும்.

3. சம்பளத் திட்டம்.- இப்பதவிக்கு SL-I-2006 ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதாந்த சம்பளத் திட்டத்திற்கு உரித்தாவர். (2006.04.25 ஆந் திகதிய பொ. நி. சு. இலக்கம் 6/2006 இன் SL-I-2006 சம்பள வகுதியாகும்.)

4. **கல்வித் தகைமைகள்**.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத்துறையில் நான்கு வருடப் பட்டப்படிப்பு.

5. **வயது எல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது 20 இற்கு குறையாமலும் 35 இனை விஞ்சிவிடாமலும் இருத்தல் வேண்டும். பட்டப்பின் படிப்பு தகைமை கொண்ட விண்ணப்பதாரர் தொடர்பில் உச்ச வயதெல்லை 40 ஆகும்.

6. **உடற்தகைமை**.- (i) சகல விண்ணப்பதாரரும் தீவின் எப்பாகத் திலும் சேவையில் ஈடுபடக்கூடியவராக இருத்தல்.

(ii) பதவியில் கடமையை மேற்கொள்வதற்கு போதிய உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டவராக இருப்பதுடன். உடற்றகுதி வைத்திய பரிசீலனைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்**.- (i) சகல விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) சகல விண்ணப்பதாரரும் சிறந்த குணவியல்பு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) மிருக வைத்தியப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2007.12.30 ஆந் திகதியாகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ இருத்தல் வேண்டும். அத்துடன் இலங்கை கால்நடை வைத்திய சபையில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதி அன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதன் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும் என விண்ணப்பக் கோரல் அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்படும் இறுதித் திகதி அன்றுக சகலவிதத்திலும் தகைமைகளைப் பூர்த்திசெய்து இருத்தல் வேண்டும்.

8. **நேர்முகப் பரீட்சை** :

8.1 பொதுவான நேர்முகப் பரீட்சை (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது). மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்கு.- ஆட்சேர்ப்புச் செய்யப்படும் ஒழுங்குவிதி மற்றும் அதற்கு இணையாக வெளியிடப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப் படுகின்ற தகைமைகளை கொண்டிருக்கின்றாரா என்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் மற்றும் உடற்தகைமையைப் பரீட்சித்துக்கொள்வதற்கும் ஆகும்.

9. **விண்ணப்பிக்கும் முறைமை.**- (i) விண்ணப்பம் 22-29 செ. மீ. அளவிலான ஏ4 கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) பட்டம் மற்றும்/ அல்லது உயர் தகைமைகளைக் கொண்ட கல்விச் சான்றிதழ்கள் ;

(இ) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ் இரண்டு. அதில் ஒன்று பாடநெறி தொடர்பான பணிப்பாளரிடம் இருந்து, பல்கலைக்கழகத்தின் பேராசிரியரிடம் இருந்து அல்லது விரிவுரையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப் பட்டதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சித்தியடைந்துள்ள அதி உயர் பரீட்சைகளினதும் சான்றிதழ்கள் ;

(உ) மிருக வைத்தியராக மிருக வைத்திய சபையில் பதிவுசெய்யப் பட்ட சான்றிதழ்.

10. ஏனைய ஒழுங்குவிதிகள்.- (i) இவ்வர்த்தமான அறிவித்தலில் ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்படாத விடயங்களில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரித்தாகும்.

(ii) வெற்றிடங்களினை நிரப்புதல், நிரப்பாமல் விடுதல் அல்லது ஒரு பகுதியினை மாத்திரம் நிரப்புதல் போன்ற விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உரியதாகும்.

(iii) இவ்வர்த்தமான அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மத்தியில் ஏதும் வேறுபாடு நிலவுமேயாயின் இங்கு சிங்கள மொழி மூலத்தினையே இறுதித் தீர்வாகக் கொள்ளல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர் எவராயினும் ஒருவர் தகைமையற்றவர் எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(v) விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டிருப்பது தெரியவரின் அல்லது ஏதாவது முக்கிய தகவல் ஒன்றினை அவர் வேண்டுமென்றே மறைத்து இருப்பாரேயாயின் அவர் சேவையில் இருந்தும் நீக்கப்பட இடமுண்டு.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைய,

கே. எம். ரீ. கேந்தரகம,
செயலாளர்.

கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு,
2013.05.02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையின் வகுப்பு II தரம் II இல் காணப்படும் கால்நடை வைத்திய அதிகாரி பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்**

(அலுவலக பயன்பாட்டிற்காக)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.

ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்) :

(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் ஆங்கிலத்தில் (தனிப் பேரெழுத்துக்களால்)

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3. தபால் முகவரி :----.
(முகவரியில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கவும்).

4. நிரந்தர வதிவிடத்துக்குரிய-

(i) மாகாண சபை :----.
(ii) மாவட்டம் :----.

5. பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

6. (அ) நீர் இலங்கைப் பிரசையா ? :----.

இனம் (சிங்களம்/இலங்கைத் தமிழ்/இந்தியத் தமிழ்/ முஸ்லிம்/ஏனைய) :----.

7. (அ) ஆண்/பெண் :----.

(ஆ) விவாகமானவர்/விவாகமாகாதவர்/விவாகரத்தானவர் : ----.

8. கல்வித் தகைமைகள் :

| பட்டம்/பட்டப்பின் படிப்பு | வகுப்பு | பல்கலைக்கழகம் | வருடம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

9. இலங்கை மிருக வைத்திய சபையில் பதிவுசெய்த இலக்கமும் திகதியும் :----.

10. சேவை விபரம் (தற்போது நிரந்தரப் பதவி வகிப்பதாயின்) :

| தற்போதைய பதவி | சேவைக்காலம் | | சேவை நிலையம் | மாவட்டம்/ மாகாணம் |
|---|---|---|---|---|
| | முதல் | வரை | | |
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |

11. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என்பதை இங்கு உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவுசெய்ததன் பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாகவில்லை என்பதை இத்தால் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்போது நிரந்தரப் பதவி ஒன்றிலுள்ள விண்ணப்பதாரருக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)

**திணைக்களத் தலைவரது சான்றிதழ் :**

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ....................................... இத்திணைக்களத்தில்/ ......................................... மாகாண சபையில் ......................................... எனும் பதவியில் உள்ளவர் எனவும், விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் அவரது தனியார் கோவைக்கு அமைவாக உண்மையானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இப்பதவியின் நிமித்தம் இவ்வுத்தியோகத்தர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் இம்மாகாண அரச சேவையில் இருந்து விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது என்பதை அறியத்தருகின்றேன். (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்.)

----,
திணைக்களத் தலைவர்.
பதவி முத்திரை :

முகவரி :----.
திகதி :----.

5-530

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குரிய போட்டிப் பரீட்சை - 2013

உணவு ஆணையாளர் திணைக்களத்தில் வெற்றிடமாக இருக்கும் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்தி தானிய ஆய்வாளர் - தரம் III பதவிக்கு நியமிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவர்.

3. நியமனம் செய்யப்படும் திகதி உணவு ஆணையாளரினால் தீர்மானிக்கப்படுவதுடன் இவ்வெற்றிடத்தை நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது பற்றிய இறுதி முடிவு உணவு ஆணையாளரின் பொறுப்பாகும்.

4. மாதாந்த சம்பள அளவுத்திட்டமானது 2007.08.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி இல. 06/2006 (iv) மற்றும் எம்என் 03-2006ஏ சம்பளப் பிரிவிற்கு அமைய ரூ. 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 சம்பள ஏற்றம் ரூபா 17,485 இல் தரம் II இற்கு செல்வதற்கும், ரூபா 21,045 இல் தரம் I இற்கு செல்வதற்குமான பதவியுயர்வுகளை கட்டாயம் கொண்டமைந்துள்ளது.

5. இப்பதவியானது நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

6. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவை நியமனம் தொடர்பான பொதுவான நிபந்தனைகளுக்கு அமைவாக இப்பதவிக்குரிய 2012.07.26 ஆந் திகதிய ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளுக்கும் அதனோடு தொடர்புடைய நிபந்தனைகளுக்கும் ஏற்ப அவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்படுத்தியுள்ள விதிகளுக்கு அல்லது அதற்கு பின்னர் ஏற்படும் மாற்றங்களுக்கு உட்பட்டவாறு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரி மேற்பார்வை முகாமைத்துவ தொழிநுட்ப (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவியில் நியமிக்கப்படுவர். அதன்படி வினைத்திறன்காண் தடை எல்லை 03 வருடங்களாகும். இவ் 03 வருடங்களுள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைவதுடன் தரம் II பதிவியுயர்வு பெற்று 03 வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னர் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் நியமனம் கிடைக்கப்பெற்று 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் 2007.05.28 ஆந் திகதிய அரசாங்க சுற்றறிக்கை 07/2007 இன்படி இரண்டாம் மொழியில் திறமையினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

7. **தகைமைகள்.**- மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு பின்வரும் தகுதிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியானது 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வரும் கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் ஏனைய பாடங்களில் சித்தியுடன் ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) இரசாயன விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(உ) கீழ்க்குறிப்பிடப்படும் தொழில் தகைமையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-
தேசிய உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயம்) கற்கைநெறியில் தராதரப்பத்திரம் பெற்றிருத்தல் HNDT (Agriculture)

(ஊ) உணவு களஞ்சியப்படுத்தல், பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் புகை அடித்தல் தொடர்பாக 02 வருட அனுபவம் கட்டாயம் இருத்தல் வேண்டும்.

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் விண்ணப்பம் கோரப்பட்ட இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னரே பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **பரீட்சை முறைகள்** :

8.1 இப்பரீட்சை வினாப்பத்திரங்கள் இரண்டினைக் கொண்டுள்ளது. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியினை மாற்றுவதற்கு பின்னர் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

8.2

| | காலம் | புள்ளி |
|---|---|---|
| (1) பொது உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 |
| (2) உணவு தொழில்நுட்பம் | 1 மணித்தியாலம் | 100 |

(அ) பொது உளச்சார்பு பரீட்சை.- விண்ணப்பதாரியின் சிந்தனையில் ஒப்புநோக்குதல், சிந்தனையின் சிறப்புத் தன்மை, தீர்மானம் எடுக்கும் திறனை அறிவதற்கான கேள்விகளைக் கொண்ட வினாத்தாள்.

(ஆ) உணவு தொழில்நுட்பம்.- தானிய ஆய்வு மற்றும் அதன் தரத்தினைப் பேணும் அறிவு போன்ற கேள்விகள் அடங்கிய வினாத்தாளைக் கொண்டது. கேள்விகள் அனைத்திற்கும் விடையளிக்க வேண்டும்.

(விண்ணப்பதாரி தமது கடமையினை நிறைவேற்றுவதற்கு ஏற்ப அவரின் தகுதியினைப் பரிசீலனை செய்யும் வகையிலான கேள்விகளைக் கொண்டமைந்திருக்கும்.)

8.3 ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளில் உயர் தகைமைகளைக் கொண்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சையில் தகைமைகளை பரிசீலனை செய்தல் மட்டுமே இடம்பெறும்.

8.4 ஒவ்வொரு கேள்விப்பத்திரங்களிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளை தெரிவுசெய்து அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் பரீட்சை ஆணையாளரினால் தயாரிக்கப்பட்டு உணவு ஆணையாளர், உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். அத்துடன் பரீட்சையில் பங்குபற்றிய அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சையில் அவர்கள் பெற்ற புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் அடங்கிய பரீட்சை முடிவுகள் அடங்கிய பட்டியல் வழங்கப்படும்.

9. **பிழையான தகவல்களை சமர்ப்பித்தவர்களுக்கான தண்டனைகள்**.- விண்ணப்பப்படிவத்தினை நிரப்பும்போது மிகவும் கவனமாக பிழையின்றி நிரப்ப வேண்டும். இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைய எந்தவொரு விண்ணப்பதாரியும் பிழையான தகவல்களைத் தந்துள்ளார் எனக் கண்டுபிடிக்கும் பட்சத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது தேவையான ஏதாவது சந்தர்ப்பத்தில் அவருடைய/ அவளுடைய விண்ணப்பத் தகுதி நீக்கப்பட இடமுண்டு. விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் எப்பொழுதாவது பிழையெனக் காணப்படின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் இடமுண்டு.

10. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூ. 750 ஆகும். அப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானப் பிரிவு 2003-02-13 இற்கு செலுத்தப்பட வேண்டும். இலங்கையிலுள்ள எந்தவொரு மாவட்டச் செயலகம் அல்லது பிரதேச செயலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். விண்ணப்பதாரியின் பெயரிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டிற்குள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். இக்கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தங்களது உபயோகத்திற்காக வைத்திருக்க வேண்டும்.

11. **விண்ணப்பப்படிவம்**.- ஏ4 (செ. மீ. 24 x 29) அளவுள்ள கடதாசியினைப் பாவித்தல் வேண்டும் :

(அ) இலக்கம் 01 தொடக்கம் 03 வரை முதலாவது பக்கத்திலும்

(ஆ) இலக்கம் 04 தொடக்கம் ஏனைய பக்கங்களையும் உள்ளடக்கியவாறு விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்திசெய்வதுடன் அதன் பிரிவுகளில் குறிப்பிட்டுள்ளபடி பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திலும், ஆங்கில விண்ணப்பப்படிவங்களில் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழிலும் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உரிய விபரங்களை தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கு அமையாதவைகளும் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் பிழைகள் திருத்தியமைக்கப்பட்டிராத விண்ணப்பப்படிவங்களும் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை தாங்கள் வைத்திருப்பது பிரயோசனமானதாகும். முழுவதும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை பிரமாணங்களுக்கு அமைய அமைந்திருக்க வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

11.1 உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும். அதன்படி பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். அதன்படி எவராவது தாங்கள் பரீட்சைக்கு அமர்வதற்கு தகுதியினைப் பெற்றுள்ளனர் என்று கருதுவதற்கு இடமில்லை.

11.2 விண்ணப்பப்படிவம் உறையிலிட்டு ஒட்டப்பட்டு அனுப்பப்பட வேண்டும். அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம் III) என்ற பதவிக்கான பரீட்சை 2013" எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

11.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி, முப்படை அதிகாரி, அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், வருடாந்தம் ரூபா 2,40,360 இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தரினால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

11.4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் 2013.06.24 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும் :-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிவாரி பரீட்சைப் பிரிவு,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

12. **பரீட்சைக்கு தோற்றுதல்.**- பரீட்சார்த்திக்கு வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையைப் பற்றி பரீட்சைத் திணைக்களத்தினால் பத்திரிகை அறிவித்தல் மூலம் அறிவிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப் பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தங்களிடம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுசீட்டின் சான்றுபடுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் கொழும்பிற்கு வெளியேயாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் உங்கள் கோரிக்கைக் கடிதத்தையும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தலானது மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

12.1 (i) விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் கடிதங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட தேசிய அடையாள அட்டை
* செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

(ii) பரீட்சை நடக்கும் தினத்தில் பரீட்சை மண்டபத்திற்கு நேர காலத்துடன் வந்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

13. பரீட்சை நடாத்துவதும் பரீட்சை முடிவுகள் அறிவிப்பதும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். பரீட்சை தொடர்பான சட்டங்களை மீறின் பரீட்சை ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும் தண்டனையை அவர் அனுபவிக்க வேண்டியேற்படும்.

14. இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் பற்றி தீர்மானங்களை எடுப்பது உணவு ஆணையாளரின் பொறுப்பாகும். சகல விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சைகள் பற்றிய சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

என். நிமல்கா டயஸ்,
உணவு ஆணையாளர்.

உணவு ஆணையாளர் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
2013.05.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உணவு ஆணையாளர் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தானிய ஆய்வாளர் - தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

Open competitive Examination for Recruitment to Supervisory Management Assistant Technical officer in food Commissioners Department (Class III of Grain Surveyor) - 2013

(அலுவலக உபயோகத்திற்கு)

* பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்.)

1\.

1.1 முதலெழுத்துடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ----.
உதா : PERERA A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2\.

2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழ்) :----.

2.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

3\.

3.1 பெண்/ஆண் பற்றியது-
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் குறிப்பிடவும்)

4. பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2013.06.30 ஆந் திகதி வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

5. கல்வித் தகைமை :

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரம் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :
(iii) பரீட்சை முடிவு :

| பரீட்சை | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரம் :
(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :
(ii) பரீட்சை சுட்டிலக்கம் :
(iii) பரீட்சை முடிவு :

| பரீட்சை | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5.3 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரியாக இருப்பின் :
(i) பல்கலைக்கழகம் :
(ii) பட்டம் :
(iii) பரீட்சை இலக்கம் :

6. தொழில் தகைமை :

(i):----.
(i):----.

7. அனுபவம் :----.

8. தாங்கள் எப்பொழுதாவது அல்லது ஏதாவது பிழை செய்து நீதி மன்றத்தினால் குற்றவாளி எனக் காணப்பட்டிருக்கின்றீரா ?
* (உரிய கூட்டில் ✓ என்று குறிப்பிடவும்)

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

9. பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் கட்டிய அலுவலகம் :----.

(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :----.

(iii) செலுத்திய தொகை ரூ. :----.

| பரீட்சைக் கட்டணம் கட்டிய பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தாங்கள் வைத்திருக்கவும்) |
|---|

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட விபரங்கள் நான் அறிந்தமட்டில் உண்மை மற்றும் பிழையற்றது என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன். இதில் ஏதாவது பகுதிகள் பூர்த்திசெய்யப்படாமல் இருப்பின் அல்லது பிழையாக பூர்த்திசெய்திருப்பின் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நானே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். மேலும் இங்குள்ள அனைத்து பகுதிகளையும் பிழையின்றி நிரப்பியுள்ளேன் எனவும் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் சமர்ப்பிக்கப்படும் விபரங்கள் பிழையானவை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் பதவியிலிருந்து நீக்கப்படும் என்றும் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் என்றும் அச்சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

(ஈ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பின்னர் மாற்ற மாட்டேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வன்/ செல்வி .................................. இனை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி யுள்ளார் என்றும், அதன் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் ஒட்டியுள்ளார் என்றும் அவர் எனது முன்னிலையில் .................................................. ஆந் திகதி கையொப்பத்தினை வைத்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை இடவும்.).
திகதி :----.

5-576

## திருத்தம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2013.04.26 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட பரீட்சை அறிவித்தலில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு சீர்திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்ளும் போட்டிப் பரீட்சை - 2012 (2013)**

09 (ii) ஆம் வாசகம் -

பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இன்கீழ் வைப்பிலிடக் கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்த முடியும்.

09 (ii) ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும்.

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2013)**

09 (ii) ஆம் வாசகம் -

பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இன்கீழ் வைப்பிலிடக் கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்த முடியும்.

09 (ii) ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும்.

**இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2012 (2013)**

11 (ii) ஆம் வாசகம் -

பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இன்கீழ் வைப்பிலிடக் கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட செயலகம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்த முடியும்.

11 (ii) ஆம் வாசகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படும்.

5-850

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.